## *16*

# அற்புதங்களின் முதல் தொகுப்பு

## (8:1–17)

இந்த இடம் வரையிலும் மத்தேயு சுவிசேஷம், இயேசுவின் ஊழியத்தை, போதித்தல், பிரசங்கித்தல் மற்றும் குணமாக்குதல் என்ற வகையில் சித்தரித்துள்ளது (4:23; காண்க 9:35). இப்போது மத்தேயு சுவிசேஷம், பெரும்பாலும் குணமாக்குதலை உள்ளடக்கிய இயேசுவின் அற்புதங்களின் தொகுப்பு ஒன்றைத் தருகிறது (அதிகாரங்கள் 8; 9). அற்புதங்கள் மூன்று அடங்கிய மூன்று தொகுப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன, இதில் ஏழாவது அற்புத நிகழ்வு உண்மையில் ஒன்றில் இரண்டு அற்புதங்களைக் கொண்டுள்ளது. இது மொத்தம் பத்து அற்புதங்கள் விரிவாகக் கொடுக்கப்பட்டதாக்குகிறது. அற்புதங்களின் மூன்று தொகுப்புகள் (8:1-17; 8:23-9:8; 9:18-34) சீஷத்துவத்தை வலியுறுத்தும் போதனைப் பிரிவுகள் இரண்டினால் பிரிக்கப்பட்டுள்ளன (8:18-22; 9:9-17).

இயேசு இந்த அற்புதங்களைச் செய்தது எதற்காக? இவைகள் எந்த நோக்கத்தை நிறைவேற்றின? இரக்கம் உள்ள கிறிஸ்து ஒவ்வொருவரையும் குணமாக்கவில்லை அல்லது மரித்திருந்த ஒவ்வொருவரையும் உயிர்ப்பிக்கவில்லை என்பதால், தாம் செய்த அற்புதங்களை அவர் எதற்காக நிகழ்த்தினார்?

முதலாவது, மனிதப் பரிதவிப்பில் இருந்து (மக்களை) விடுவிக்கவும் சாத்தியமான போதெல்லாம் மனிதத் தேவைகளை நிறைவேற்றவும், இயேசு தமது அற்புதங்களைச் செய்தார். இரண்டாவது, அவரது அற்பதங்கள் அவரது மேசியாத்துவ உரிமைகோருதல்களுக்குச் சட்டப்பூர்வமான நிரூபணத்தை அளித்தன (யோவான் 20:30, 31) மற்றும் அவரைக் குறித்து உரைக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றின (ஏசாயா 29:18, 19; 35:4-6).

இயேசு, தம்மீது கவனத்தை ஈர்ப்பதற்காக அற்புதங்களை ஒருக்காலும் செய்யவில்லை, ஏனெனில் அவரது ஊழியம் முழுவதிலும் அவர் தம்மீது கவனத்தின் வெளிச்சம் விழுவதைத் தவிர்த்து ஒதுக்கி இருந்தார். பார்வைக்கு உகந்த தமது செயல்களை நோக்கி மக்கள் மாற்றப்படுவதை அவர் விரும்பாதிருந்தார். உண்மையில் அவர் யாராக இருந்தார் என்பதன் மீதே அவர்களின் விசுவாசம் கவனம் குவிக்கப்பட வேண்டியதாக இருந்தது. பவுல், “ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்” என்று கூறினார் (ரோமர் 10:17).

இயேசுவின் அப்போஸ்தலர்கள் அற்புதங்களை நிகழ்த்தக் கூடியவர்கள் ஆவார்கள் என்று, இயேசு எதிர்காலத்தைப் பற்றி அறிவித்தார். அவருடையவைகள் போன்றே, இவைகளும் “அடையாளங்களாகச்”

*செயல்படும் (மாற்கு 16:20; காண்க எபிரெயர் 2:1-4). அவரது வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் இப்படிப்பட்ட அற்புத அடையாளங்களை, தேவனிடத்தில் இருந்து தாங்கள் பெற்றுப் பிரசங்கித்த வசனத்தை உறுதிப்படுத்தப் பயன்படுத்தினர் (2 கொரிந்தியர் 12:12).*

*மத்தேயு 8:1-17 வசனப்பகுதி, இயேசுவினால் நிகழ்த்தப்பட்ட மூன்று அற்புதங்களைப் பற்றிக் கூறுகிறது. இந்த அற்புதங்களினால் பயனடைந்த நபர்கள் ஒவ்வொருவரும், யூதர்களினால் சிறுமையாகக் கண்ணோக்கப் பட்டிருந்த ஒரு குழுவைச் சார்ந்தவராக இருந்தனர். இயேசு, ஒரு தொழுநோயாளியை, ஒரு புறஜாதியாரை மற்றும் ஒரு பெண்ணைக் குணமாக்கினார்.*

## தொழுநோயாளியைக் குணமாக்குதல் *(8:1-4)*

***1அவர் மலையிலிருந்து இறங்கின போது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.***

***2அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.***

***3இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.***

***4இயேசு அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு; ஆயினும், அவர்களுக்குச் சாட்சியாக நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக்காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்.***

***வசனம் 1.*** *4ம் அதிகாரத்தின் முடிவுப்பகுதி, "திரளான ஜனங்கள்" இயேசுவைப் பின்பற்றியதாகச் சுட்டிக்காண்பித்தது (4:25). மேலும் 5ம் அதிகாரத்தின் தொடக்கப்பகுதியும், திரளான ஜனங்கள் தம்மைப் பின்பற்றுதலை, அவர் ஒரு மலையின் மீது ஏறிச்சென்று தமது சீஷர்களுக்குப் போதிக்க ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தூண்டியது. அந்த உரையை (அதிகாரங்கள் 5-7) தொடர்ந்து, அவர்* ***மலையிலிருந்து இறங்கி வந்தார்.*** *பத்துக் கட்டளைகளுடன் மோசே சீனாய் மலையில் இருந்து இறங்கி வந்த நிகழ்வைக் குறிப்பிடும்போது (யாத்திராகமம் 34:29), இதே போன்ற மொழிநடை பயன்படுத்தப்பட்டது.* ***திரளான ஜனங்கள்*** *இன்னமும் இயேசுவுக்குப்* ***பின்சென்றார்கள்*** *என்ற உண்மையானது, அவரது அற்புதங்களைக் காண்பதற்கு எண்ணற்ற சாட்சிகள் இருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. இந்த அற்புதங்கள் பற்றிய விபரமானது, அவரைச் சுற்றிலும் இருந்த மக்கள் கூட்டத்தைப் பற்றிய குறிப்புரையைக் கொண்டு தொடங்கி அதே போன்ற குறிப்புரையுடன் முடிகிறது (8:1; 9:36-38).*

***வசனம் 2.*** *பழைய ஏற்பாட்டுக்காலங்களில் போன்றே இயேசுவின் நாட்களிலும் தொழுநோய் என்பது தேவனால் தரப்பட்ட பலவீனப்படுத்தும் தண்டனையாக இருந்தது (லேவியராகமம் 13; 14; எண்ணாகமம் 12:10, 12). வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் இருந்த*

*தொழுநோயானது நவீன காலத்தின் ஹான்ஸன் நோய்தானா அல்லவா என்பதைப் பற்றிய கருத்தில் மருத்துவக் கோட்பாட்டாளர்கள் பிரிவு பட்டுள்ளனர். "தொழுநோய்" (lepra) என்ற வார்த்தை ஒரு தனிநோயை அல்ல, ஆனால் (சோரியாஸிஸ், படைநோய், விட்டிலிகோ, காசத் தொழுநோய் மற்றும் வெண்தொழுநோய் ஆகிய) தோல்நோய்களின் வகைகளைக் குறிப்பதாக உள்ளது.*

*இந்தத் **தொழுநோயாளி** இயேசுவை அணுகும் தைரியம் கொண்டிருந்தார் என்பது வியப்புக்கு உரியதாகும். நியாயப்பிரமாணத்தின்படி, தீட்டான தொழுநோயாளி, சமூகத்தில் இருந்து தள்ளி வசிக்க வேண்டும் மற்றும் தமக்கு அருகில் மற்றவர்கள் வராதிருக்கும்படி, தமது உதடுகளின்மீது கையை வைத்துக்கொண்டு, "தீட்டு தீட்டு!" என்று கூறி எச்சரிக்க வேண்டும் (லேவியராகமம் 13:45, 46; எண்ணாகமம் 5:2-4). பத்து தொழுநோயாளிகளை இயேசு குணமாக்கியபோது, அவர்கள் "தூரத்திலே நின்று" இருந்தனர் (லூக்கா 17:12). அதற்குப் பதிலாக இந்தத் **தொழுநோயாளி வந்து அவரைப் பணிந்து கொண்டார்**. KJV வேதகமம், அந்த மனிதர் இயேசுவை "தொழுதுகொண்டார்" என்று கூறுகிறது. Proskuneō என்ற கிரேக்க வினைச்சொல், ஆராதனையில் தேவனுக்கு முன்பாகக் குனிந்து வணங்குதலை அல்லது மேசியாத்துவ அரசர் என்ற வகையில் இயேசுவுக்குக் கனம் செலுத்துதலைக் குறித்து அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க 2:2ன் மீதான விளக்கங்கள்).*

*தொழுநோயாளி, தம்மைக் குணமாக்கும்படி இயேசுவை வேண்டிக் கேட்டார், அவர் "**ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்** என்று கூறினார்." அவர் தம்மைக் குணமாக்க இயேசு கொண்டிருந்த திறன் பற்றி சந்தேகம் எதையும் வெளிப்படுத்தவில்லை; அவர் கர்த்தர் ஒரு அற்புதத்தை நிகழ்த்தக் கொண்டிருந்த மனவிருப்பம் பற்றி மாத்திரமே கேள்வி கேட்டார். யூதப்பாரம்பரியத்தின்படி, தொழுநோய் என்பது பாவத்திற்குத் தண்டனையாக இருந்தது என்ற கண்ணோட்டத்தில், இந்தக் கேள்வி எழும்பியிருக்க வாய்ப்பு இருந்தது. தேவனுடைய நாமத்தைத் தூஷித்தல், பாலுறவுரீதியான ஒழுக்கக்கேடு, கொலை, விபசாரம் மற்றும் விசேஷமாக அவதூறு பேசுதல் ஆகியவை இப்படிப்பட்ட பாவங்களில் உள்ளடங்கின.[1] தொழுநோயை அவதூறு பேசுதலுடன் இணைத்தல் என்பது மோசேக்கு எதிராக மிரியாம் பேசிய நிகழ்வில் தனது வேர்களைக் கொண்டிருந்தது (எண்ணாகமம் 12:1-15). ஒருவேளை இந்தத் தொழுநோயாளி, தாம் செய்த பாவத்திற்கான ஒரு தண்டனை என்ற வகையில் மாத்திரம் தனது வியாதியை இயேசு கண்ணோக்கி அதன் காரணமாகத் தன்னைக் குணமாக்க மாட்டார் என்று தனக்குள் யோசனை செய்திருக்கலாம்.*

***வசனம் 3.** இம்மனிதர் நோய்தொற்றியவராக இருந்ததால், எந்த நபரும் செய்திராத ஒரு விஷயத்தை இயேசு செய்தார்: அவர் **அவனைத் தொட்டார்**. தொழுநோயாளியைத் தொடுதல் அல்லது தொழுநோயாளியால் தொடப்படுதல் என்பது நியாயப்பிரமாணத்தின்கீழ் தடைசெய்யப்பட்டிருந்தது (லேவியராகமம் 5:3-6). தொழுநோயாளியைத் தொடுதல் என்பது ஒரு யூதரைத் தீட்டுப்படுத்திற்று. "இயேசு மனதுருகி, கையை நீட்டி அவனைத் தொட்டு" என்று கூறும் மாற்கு 1:41ம் வசனம் இயேசுவின் இருதயத்தை வெளிப்படுத்துகிறது.*

இயேசு, **எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு** என்று பதில் அளித்தார். அந்த மனிதர் **உடனே** குணமாக்கப்பட்டார், எந்தத் தாமதமும் இன்றி அந்த வியாதி உடனே மறைந்து போனது. உடலைத் தொட்டதினால் தொழுநோயாளி இயேசுவைத் தீட்டாக்குவதற்குப்பதிலாக, இயேசு தமது தெய்வீக வல்லமையினால் தொழுநோயாளியைச் சுத்தமாக்கினார். அவர் அம்மனிதரின் பழைய சரீரத்தை அவருக்கு மீட்டுக்கொடுத்தார், சமூகத்தில் மறுபடியும் பிரவேசிக்க அவரைத் தகுதிப்படுத்தினார். தொழுநோயாளிகள் அற்புதமாய்க் குணமாக்குதல் என்பது மேசியா வந்திருந்தார் என்பதை முன்னுரைக்கும் அடையாளங்களில் ஒன்றாக இருந்தது (11:2-6).

**வசனம் 4.** அந்த மனிதரைக் குணமாக்கியபின்பு **இயேசு** அவருக்கு இரண்டு அறிவுறுத்துதல்கள் கொடுத்தார். முதலாவது அவர், **இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு** என்ற கட்டளையைக் கொடுத்தார். இயேசு, தமது போதனையை யூத மக்கள் இடைமறிக்காதபடிக்கும் ரோம அதிகாரிகளின் கவனத்தைப் பெறாதபடிக்கும், இதுபோன்ற அறிவுத்துதலைச் சிலவேளைகளில் இயேசு கொடுத்தார் (9:30; 12:16; 16:20; 17:9). இந்த அற்புதம் வெளியரங்கமாக நிகழ்த்தப்பட்டதால். அந்த அறிவுறுத்துதல் எவ்வாறு செயல்படுத்தப் பட்டிருக்கக் கூடும் என்று ஒருவர் வியப்படையலாம். இருப்பினும், பிற்பாடு இது, இந்த அற்புதம் தனிப்பட்ட காட்சியமைவில், மக்கள் கூட்டம் புறப்பட்டுச் சென்றபின்பு நடந்தது என்று சுட்டிக்காட்டலாம். மற்றும், மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் கூறப்படும் வரிசைமுறையில் இருந்து வேறுபடும் அற்புதங்களின் தொகுப்பு ஒன்றை மத்தேயு சுவிசேஷகர் முன்வைத்து இருப்பதால், மத்தேயு கண்டிப்பான நாள்வரிசை முறையைப் பின்பற்றினார் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது.

இரண்டாவதாக இயேசு, **நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக்காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து** என்று தொழுநோயாளியிடம் கூறினார். தோல்வியாதிகள் கொண்டோரைப் பரிசோதிக்கும் பொறுப்பு ஆசாரியர்களுக்கு இருந்தது. இம்மனிதர் சுத்தமானவர் என்று அறிவிக்கப்படுவதற்கு ஆசாரியர் ஒருவர் தேவைப்பட்டார், Robert H. Mounce அவர்களின் கூற்றுப்படி, ஆசாரியர்கள், "பொதுசுகாதாரத்திற்கு ஆலயத்தொடர்புடைய ஊழியக்காரர்களாக" இருந்தனர்.[2] தொழுநோயாளி குணமானது எவ்வாறு அதிகாரத்துவப் படுத்தப்பட வேண்டும் என்பதையும் என்ன காணிக்கை செலுத்தப்பட வேண்டும் என்பதையும் நியாயப்பிரமாணம் குறிப்பாக உரைத்திருந்தது (லேவியராகமம் 14:1-32). சுத்திகரிக்கப்பட்ட தொழுநோயாளி, ஏற்ற காணிக்கைகளை அளிப்பதற்கு எருசலேமில் இருந்த தேவாலயத்திற்குப் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

"அவர்களுக்குச் சாட்சியாக" என்ற சொற்றொடரின் அர்த்தம் தன்னில் புதிரான ஒரு அம்சத்தைக் கொண்டுள்ளது. இச்சொற்றொடரின் தெளிவற்ற நிலையானது இரண்டு கேள்விகளை எழுப்புகிறது. முதலாவது, "அவர்களுக்கு" என்ற பிரதிப்பெயர்ச்சொல் யாரைக் குறிக்கிறது? அது "ஆசாரியர்களை" குறிப்பதாக இருக்க முடியும், ஆனால் "ஆசாரியனுக்கு" என்ற வார்த்தை இவ்வசனத்தில் ஒருமையில் இருப்பதால், இது கேள்விக்குரியதாக உள்ளது. "அவர்களுக்கு" என்பது அனேகமாக "மக்கள் கூட்டத்தை" அல்லது மிகப்பொதுவாக "மக்களை" குறிப்பதாக இருக்கலாம் (8:1).

*இரண்டாவதாக, "சாட்சியாக" என்பது எதைக் குறிக்கிறது? (1) ஒருவேளை இது, குணமாக்கப்பட்ட தொழுநோயாளி இயேசுவைப் பற்றிய சாட்சியாக அவர்களிடத்தில் விளங்குவார் என்று அர்த்தப்படுத்துவதாக இருக்கலாம். (2) மக்கள் இயேசுவினிடத்தில் கொண்டிருந்த அவிசுவாசத்தின் காரணமாக, அந்த மனிதர் அவர்களுக்கு எதிராக ஒரு சாட்சியமாக இருந்திருக்கக் கூடிய இன்னொரு சாத்தியக்கூறு உள்ளது. (3) தக்க பலிகளைச் செலுத்தும்படி அந்த மனிதரை இயேசு அனுப்பியது, அம்மனிதர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலை பரப்புதலுக்கு ஒரு சாட்சியாக இருந்திருக்க முடியும் (காண்க 5:17-20). இருப்பினும், சுத்தமாக்கப்பட்ட தொழுநோயாளி, தம்மை இயேசு குணமாக்கியதை "ஒருவருக்கும் சொல்லாதபடி" இருக்க வேண்டியிருந்தது என்பது, இந்த மூன்று கருத்துக்களிடம் உள்ள பிரச்சனையாக இருக்கிறது. (4) நான்காவதாக உள்ள ஒரு தெரிவு பின்வருமாறு: இந்தத் தொழுநோயாளி சுத்தமாக்கப்பட்டார் என்பதை, ஆசாரியர்கள் ஆய்வு செய்தலும் தக்க பலிகளும் "கூட்டத்திற்கு" அல்லது "மக்களுக்கு" சாட்சியளித்து விளங்கச் செய்யும், மற்றும் இப்படிப்பட்ட விஷயத்தில், அவர் மீண்டும் ஒருமுறை மக்கள் சமூகத்தில் பிரவேசிக்க விடுதலையாக இருந்தார். இந்த விளக்கம் கலாச்சாரத்தைப் பற்றிய மிகுந்த உணர்வறிவை ஏற்படுத்துகிறது மற்றும் இதுவே நவீனகாலத்தில் உள்ள பல மொழிபெயர்ப்பாளர்களால் பரவலாக ஆதரிக்கப்படுகிறது* (NEB; TEV; LB; NCV; CEV; JNT; NLT).

*இந்த நிகழ்ச்சியின் இணைவசனங்களாக உள்ள விபரங்கள், குணமாக்கப்பட்ட தொழுநோயாளி, ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் தாம் குணமாக்கப்பட்டதை எல்லா இடங்களிலும் அறிவித்துப் பரப்பினார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது (மாற்கு 1:45; லூக்கா 5:15). இது இயேசுவின் ஊழியத்திற்கு தடையாக இருந்தது, அவர் மக்கள் கூட்டம் நிறைந்த இடங்களில் இருந்து தற்காலிகமாகத் தூரம் செல்லும்படி அவரை கட்டாயப்படுத்திற்று.*

## *நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரரர் குணமாக்கப்படுதல் (8:5-13)*

***5இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து:***

***6ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக் கொண்டான்.***

***7அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.***

***8நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்போழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.***

***9நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான்.***

***10இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப்***

**பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**[11]அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்.**

**[12]ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**[13]பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார் அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.**

*__வசனம் 5.__ அடுத்த அற்புதம், கலிலேயாக் கடலின் கரையோரமாக இருந்த, செழித்தோங்கிய நகரமான __கப்பர்நகூமில் நடந்தது__. அந்த நகரம் பேதுருவின் சொந்த ஊராக இருந்தது (8:14) மற்றும் இது இயேசுவின் செயல்பாடுகளுக்கு ஒரு அடித்தள இடமாகவும் ஆயிற்று (4:13; 9:1). இந்த ஊரில் இயேசு பல அற்புதங்கள் செய்திருந்தும், இந்த ஊர் மக்கள் அவரை விசுவாசிக்க மறுத்த காரணத்தினால், 11:23ல் இயேசு இந்த நகரத்தின்மீது சாபத்தை உரைத்தார். பழங்கால ஜெப ஆலயம் ஒன்றின் சிதிலங்களும் பேதுருவின் வீடாக இருக்கலாம் என்று கூறப்பட்ட ஒரு வீடு உட்படச் சில வீடுகளின் சிதிலங்களும், இவ்விடத்தில் இன்றைய நாட்களின் புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளன.[3]*

*__இயேசுவை__ அணுகிய மனிதர் புறஜாதியாரான ஒரு ரோம நூற்றுக்கு அதிபதியாக இருந்தார். நூற்றுக்கு அதிபதிகள், கட்டளையிடும் மற்ற அதிகாரிகள் போலின்றி, தங்கள் போர்வீரர்களுடன் சேர்ந்து போரிடும் தொழில் முறைப் __போர்வீரர்களாக__ இருந்தனர். அவர்கள், “ரோமானியப் படையின் முதுகெலும்பு” என்று அழைக்கப்பட்டுள்ளனர். ரோமானியப் படையானது, பேரரசு முழுவதிலும் பணியாற்றும்படி நியமிக்கப்பட்டிருந்த இருபத்தி ஐந்து லேகியோன்கள் (ஏறக்குறைய 150,000 மனிதர்கள்) கொண்டிருந்தது.[4] ஒரு ரோமானிய “லேகியோன்” என்பது ஆறாயிரம் போர்வீரர்களைக் கொண்ட முழுமையான பலம் கொண்ட படையாக இருந்தது, இது அறுநூறு மனிதர்களைக் கொண்ட பத்து “கோஹார்ட்டுகளாக” பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோஹார்ட்டும் ஆறு “நூறுகளாக” மேலும் பிரிக்கப்பட்டிருந்தது, இவை ஒவ்வொன்றிலும் நூறு போர்வீரர்களும் அவர்களுக்குக் கட்டளையிடும் ஒரு நூற்றுக்கு அதிபதியும் இருந்தனர். இந்தத் தலைவர், ஒழுக்கம், பணிநியமனம் மற்றும் கட்டளைகள் நிறைவேற்றப்படுதலை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாளியாக இருந்தார்.*

*கலிலேயாவில், குறிப்பிட்ட இந்த நூற்றுக்கு அதிபதி இருத்தல் என்பது பொருத்தமானதாக உள்ளது. டேவிட் ஹில் அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:*

> *கலிலேயா மற்றும் பெரேயா பகுதிகளின் காற்பங்கு தேசாதிபதியான, ஏரோது அந்திப்பா என்பவர், தமது சொந்தப் பகுதிக்குப் புறம்பே இருந்து*

பணியில் அமர்த்தப்பட்டிருந்த படைகளிடம் வசூல் செய்யும் உரிமை கொண்டிருந்தார். கப்பர்நகூம் என்பது காவல் படை கொண்ட நகரமாகவும் முக்கியமான சுங்கவரிவசூல் செய்யும் இடமாகவும் இருந்தது, எனவே ஒரு இராணுவ அதிகாரி (இ.வ. யோவான் 4.46) இங்கு இருத்தல் என்பது இயல்பாகவே அவசியமான ஒன்றாக இருந்தது.[5]

ரோம நூற்றுக்கு அதிபதிகள் - வழக்கமாகவே - உயர்ந்த ஒழுக்கங்களும் கண்ணியமான பண்பும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தனர். புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள ஒவ்வொரு நூற்றுக்கு அதிபதியும் இந்தப் பண்புக்குப் பொருத்தமாக இருக்கிறார் (27:54; நடபடிகள் 10:1, 2, 22; 22:25, 26; 27:43). லூக்கா 7:3-5ல் தற்போதய வசனப்பகுதியில் உள்ள மனிதர், கொர்னேலியு (நடபடிகள் 10:2, 22) போன்றே தேவபயம் உடைய புறஜாதியாராக இருந்தார் என்று தோன்றுகிறது. குறிப்பிட்ட இந்த நூற்றுக்கு அதிபதியின் பண்பைப் பற்றிய சுட்டிக்காண்பித்தல் என்பது, பெரும்பான்மையான ரோமப் போர்ச்சேவகர்களைப் போலின்றி, இவர் யூதர்களால் உயர்வாக மதிக்கப்பட்டார் என்பதாகும்.

இந்த நூற்றுக்கு அதிபதி, யூத மூப்பர்கள் சிலர் மூலமாகத் தமது வேண்டுகோளைக் கிறிஸ்துவினிடத்தில் தெரியப்படுத்தியதாக லூக்கா பதிவு செய்தார். இயேசுவிடம் அவர்கள், "நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான்" என்று கூறினர் (லூக்கா 7:4, 5). மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களுக்கு இடையிலான வேறுபாட்டைப் பற்றி, "முகவர்கள் மூலமாகச் செய்யும் ஒரு விஷயத்தை, தாமே செய்ததாக மனிதர்கள் கூறலாம். எனவே இயேசுவினிடத்தில் நூற்றுக்கு அதிபதியின் உரையாடல் பற்றிய சிறு குறிப்பை மாத்திரம் மத்தேயு கொடுத்திருக்க, நிகழ்வுகளின் உண்மையான வரிசைமுறையை பெரும் விபரங்களுடன் லூக்கா கொடுக்கிறார்" என்று லியோன் மோரீஸ் அவர்கள் விளக்கம் அளித்தார்.[6]

**வசனம் 6.** 6 மற்றும் 8 ஆகிய வசனங்களில், நூற்றுக்கு அதிபதி இயேசுவை **ஆண்டவரே!** (*kurios*) என்று குறிப்பிட்டார். இந்தச் சொற்றொடர், ("ஐயா") ஒரு கண்ணியமான குறிப்பில் இருந்து ("தேவன்") தெய்வீகப் பெயர் வரையிலான பரவலான பலவகை அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும். இங்கு இதனுடைய பயன்பாடு, வெறும் மரியாதைப் பண்பு என்பதைக் காட்டிலும் அதிகமான அர்த்தப்படுவதாக இருக்க வேண்டும்; இது அவருடைய கர்த்தத்துவத்தைப் பற்றிய அங்கீகரித்தலாகவும் இருக்கலாம். இது 8 மற்றும் 9 ஆகிய வசனங்களில் நூற்றுக்கு அதிபதியின் கருத்துரைகளினால் சுட்டிக்காண்பிக்கப் படமுடியும்.

நூற்றுக்கு அதிபதி, தமது **வேலைக்காரன்** மீது காண்பித்த அக்கறையினால் அவரது பண்பு மேலும் செயல்விளக்கப்படுத்தப் படுகிறது. மத்தேயு சுவிசேஷத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள (*pais*) கிரேக்கச் சொல், ஒரு மகனை அல்லது ஒரு அடிமையைக் குறிக்கக் கூடிய, "பிள்ளை" என்று அர்த்தப்படக்கூடிய ஒன்றாக உள்ளது. இருப்பினும் லூக்கா 7:2ம் வசனம் "அடிமை" என்பதற்கான (*doulos*) கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகிறது.[7] இம்மனிதர், ஒரு அடிமைக்கு இவ்வளவு அதிகமான அக்கறையைக்

காண்பித்தார் என்ற உண்மையானது, ரோமர்கள் பலரால் சாதாரண பண்பாகக் காணப்பட்டு இருந்தாலும், இது அவரது நல்ல இருதயத்தை நிரூபிக்கிறது.

நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன், **வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப் பட்டான்.** திமிர்வாதத்தின் வகையோ அல்லது அதற்கான காரணமோ தரப்படவில்லை. "வேதனைப்படுகிறான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*basanizō*) கிரேக்க வினைச் சொல்லானது உருவகநடையில் பயன்படுத்தப்பட்டு மாபெரும் வருத்தம் என்பதைக் குறிப்பதாக உள்ளது. NLT வேதாகமம் "வேதனையால் ஆட்டுவிக்கப்படுகிறான்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளது. இயேசு "வந்து தனது [நூற்றுக்கு அதிபதியின்] அடிமையினுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்பதே அவரிடத்தில் நூற்றுக்கு அதிபதியின் வேண்டுகோளாக இருந்தது (லூக்கா 7:3).

**வசனம் 7. அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.** கிரேக்க வசனத்தில், "*நான்*" (*egō*) என்ற தனிப்பெயர்ச்சொல் வலிவார்ந்ததாக உள்ளது. இந்த அம்சம் NJB வேதாகமத்தில் காணப்படக் கூடும்: "நான் வந்து *நானே* அவனைக் குணமாக்குவேன்" (வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது). சில கல்வியாளர்கள் இயேசுவின் கூற்றை ஒரு கேள்வி என்ற வகையில் விளக்கப்படுத்துகின்றனர்: "நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேனா?" வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "[ஒரு யூதனாகிய] *நான்*, [புறஜாதியான் ஒருவனுடைய வீட்டிற்கு] சென்று அவனை குணமாக்குவேனா?" என்று இது அர்த்தமாகிறது. 15:21-28 வசனப்பகுதியில் இயேசு, கானானியப் பெண்ணின் மகளைக் குணமாக்கத் தயங்கியதை அடிப்படையாகக் கொண்டு, இந்தக் கண்ணோட்டத்தை டக்ளஸ் R. A. ஹேர் அவர்கள் ஆதரித்தார்.[8] மவுன்ஸ் அவர்கள், "இயேசு அப்போதுதான் ஒரு தொழுநோயாளியிடம் சென்று அவனைத் தொட்டிருந்தார்: புறஜாதியார் ஒருவரின் வீட்டிற்குள் பிரவேசிக்க அவர் தயங்கி இருக்கமாட்டார்" என்று கூறி இந்தக் கண்ணோட்டத்தை எதிர்த்தார்.[9]

**வசனம் 8.** நூற்றுக்கு அதிபதியின் நண்பர்களில் ஒருவர், அவருக்குச் செய்தி கொண்டு வந்து, அவரைச் சந்தித்த வேளையில், அவரின் இல்லத்திற்கு நெருங்கி இயேசு வந்து கொண்டிருந்தார் என்று லூக்காவின் சுவிசேஷ விபரம் கூறிற்று (லூக்கா 7:6, 7). **நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல என்று கூறினார்.** இந்தப் பதிலுரையானது நூற்றுக்கு அதிபதியின் தாழ்மையைச் சுட்டிக்காண்பிக்கிறது, ஏனெனில் அவர் தமது இல்லத்தில் இயேசுவைத் தமது விருந்தினராகக் கொண்டிருக்கத் தாம் தகுதியற்றவர் என்று நம்பினார். இம்மனிதர் தேவனுக்குப் பயந்தவராக இருந்தார் எனலாம் மற்றும் இவர் உள்ளூரில் ஒரு ஜெப ஆலயம் கட்டுவிக்க நிதி உதவி செய்திருந்தார், புறஜாதியாரின் வீட்டிற்குள் நுழைவதற்கு எதிராக யூதத்துவத் தடைபற்றி இவர் அறிந்திருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை (காண்க யோவான் 18:28; நடபடிகள் 10:28). இது வேதாகமரீதியான பிரமாணமாக இருக்கவில்லை ஆனால் அதற்கு மாறாக இது ஒரு பாரம்பரியமான பிரமாணமாக இருந்தது. இதைப்பற்றி "புறஜாதி யார் வசிக்கும் இடங்கள் தீட்டானவை" என்று அறிவித்தல் மூலம் மிஷ்னா என்ற புத்தகம் இதைப் பாதுகாத்தது.[10] எனவே நூற்றுக்கு அதிபதி தமது இல்லத்திற்கு இயேசுவை அழைத்தால், யூதர்களின் மனதைப் புண்படுத்துதல்

*அல்லது நோயாளியான ஒரு நபரைப் புறக்கணித்தல் ஆகியவற்றிற்கு இடையில் ஒன்றை இயேசு முடிவு செய்யும்படி தாம் கேட்டிருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார்.*

*நூற்றுக்கு அதிபதி, ஒரு அழைப்பு விடுத்தலுக்குப் பதிலாக, வேலைக்காரனைக் குணமாக்கும்படி மாத்திரம் இயேசுவினிடத்தில் கேட்டுக்கொண்டார்:* ***ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.*** *தமது வீட்டிற்கு இயேசு வருவதற்குத் தாம் பாத்திரன் அல்ல என்று அவர் தாமே நம்பியிருந்தாலும், தொலைவில் இருந்தே தமது வேலைக்காரனைத் தொடாமலே கூட அவரால் குணமாக்க முடியும் என்று நம்புவதற்குப் போதுமான விசுவாசத்தைக் கொண்டிருந்தார்.*

***வசனம் 9.*** *குணமாக்குவதற்கு இயேசு கொண்டிருந்த வல்லமையின்மீது நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்திற்கு இங்கு மற்றொரு சாட்சியம் காணப்படுகிறது. அவர்* ***அதிகாரத்துவம்*** *என்பதைப் புரிந்து கொண்டிருந்தார். அவர் அதிகாரத்திற்குக்* ***கீழ்ப்பட்டவராகவும்*** *அதிகாரத்தில்* ***உள்ளவராகவும்*** *இருந்தார். ஒருபுறம் அவர், தமக்கு மேல் இருந்தவர்களுக்கு, கோஹார்ட்டில் மற்றும் லேகியோனில் - கடைசியில் பேரரசருக்கும்கூட - பதில் அளிக்க வேண்டியவராக இருந்தார். மறுபுறம் அவர், தமது* ***படைவீரர்களிடம்*** *சிலவற்றைச் செய்யச் சொல்லும் போது, அவர்கள் எந்தக் கேள்வியும் கேட்காமல் கீழ்ப்படியும்படி எதிர்பார்க்கப் பட்டிருந்தனர். அவ்வாறு கீழ்ப்படியாமல் போகுதல் என்பது, பேரரசருக்குச் செய்யும் துரோகமாகவும் பேரரசை அவமானப் படுத்துதலாகவும் கருதப்பட்டது. அவரது படைவீரர்களுக்கோ அல்லது அவரது* ***அடிமைக்கோ,*** *அந்த நூற்றுக்கு அதிபதி (****போ! ... வா இதைச் செய்!****) கட்டளைகள் கொடுத்தலும் அவற்றைச் செய்ய வைத்தலும் அவருக்கு வழக்கமாக இருந்தது. ஹேர் அவர்கள், "அதேபோன்று, இயேசு தேவனிடத்தில் இருந்து அதிகாரத்தைப் பெற்றுள்ளார், அந்த அதிகாரம் அவர் தமது கட்டளைகளைச் செய்யும்படி காணப்படாத ஆவிகளுக்கு (தூதர்களுக்கு) கட்டளையிட அனுமதிக்கிறது என்று அவர் மறைமுகமாக உணர்த்துகிறார்" என்று கருத்துத் தெரிவித்தார்.*[11]

***வசனம் 10.*** *நூற்றுக்கு அதிபதி கூறியதை* ***இயேசு ... கேட்டு ஆச்சரியப்பட்டார்.*** *"ஆச்சரியப்பட்டு" (thaumazō) என்ற வினைச்சொல், இயேசுவின் போதனை மற்றும் அற்புதங்கள் ஆகியவற்றிற்கு மக்கள் கூட்டத்தில் திகைப்புக்குரிய பதில்செயலைக் குறிப்பிட அடிக்கடி பயன்படுத்தப் பட்டுள்ளது. இருப்பினும், இயேசு தாமே திகைப்படைதல் என்ற அவரது மனிதத் தன்மையைச் சுட்டிக்காட்டும் வகையில் இது ஒரு சில முறைகள் மாத்திரமே பயன்படுத்தப் பட்டுள்ளது. இவ்வசனத்திலும் இதன் இணை வசனத்திலும், நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் கண்டு அவர், "ஆச்சரியப்பட்டார்" (காண்க லூக்கா 7:9). மாற்கு 6:6ல் இயேசு தமது சொந்த ஊரான நாசரேத்தூரில் புறக்கணிக்கப்பட்டபோது, "அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்."*

*இயேசு தம்முடன் இருந்த யூதர்களிடத்தில்,* ***இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை*** *என்று கூறினார். மக்கள் "பெரிய விசுவாசம்" கொண்டுள்ளதாக இயேசு இருமுறை மாத்திரமே குறிப்பிட்டார்: நூற்றுக்கு அதிபதி பற்றிய இக்காட்சி மற்றும் கானானியப் பெண் பற்றிய 15:21-*

28ல் உள்ள காட்சி. இவ்விருவருமே புறஜாதிகளாக இருந்தனர்! இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும், மற்றவற்றைப் போலின்றி, தூரத்தில் இருந்தே அவர் குணமாக்கினார். வழக்கமாக இயேசு, வியாதிப்பட்டவரிடத்தில் நேரடியாகப் பேசுதல் அல்லது அவர்களைத் தொடுதல் மூலமாகவே குணமாக்கினர். மத்தேயு சுவிசேஷத்தில் "விசுவாசம்" (*pistis*) என்ற சொற்றொடர் இவ்விடத்தில்தான் முதன்முறையாகக் காணப்படுகிறது (8:10; 9:2, 22, 29; 15:28; 17:20; 21:21; 23:23). இதற்குச் சற்றுப் பிற்பாடு, இயேசுவின் சீஷர்கள் "அற்பவிசுவாசம்" கொண்டிருந்ததற்காக அவரால் கடிந்துகொள்ளப்பட்டனர் (8:26).

**வசனம் 11. அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து** வந்து என்பது பற்றிய இயேசுவின் தீர்க்கதரிசனம், பூமியின் மக்களைக் குறிப்பிட்டது. லூக்கா, "வடக்கிலும் தெற்கிலும் இருந்து" என்ற சொற்றொடரைக் கூடுதலாகக் கூறினார் (லூக்கா 13:29). இஸ்ரவேல் நாட்டின் எல்லைகளுக்குள் வாழ்பவர்களில் இருந்து என்பதே இங்கு கருத்துப் பொருளாக உள்ளது. அடிமைத்தளையில் பிடிபட்ட யூதர்கள் நாட்டிற்குத் திரும்பியதைக் குறிக்க இதேவிதமான மொழிநடை பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது (சங்கீதம் 107:2, 3; ஏசாயா 43:5, 6; 49:8-13). இருப்பினும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை, பிரதானமாக புறஜாதிகளுக்கே உரியதாகும்.

அநேக மக்கள் வந்து **பந்தியிருப்பார்** என்று இயேசு கூறினார். குறைந்தபட்சம் முறைப்படியான விழாக்களின் போதாவது, மக்கள் ஒன்றுகூடி விருந்து உண்ணுகையில், திண்டுகளின்மீது அல்லது தலையணைகளின்மீது சாய்ந்துகொண்டு தங்களின் பாதங்களை மேஜையில் இருந்து புறம்பே நீட்டிக் கொண்டிருப்பது வழக்கமாக இருந்தது. அவர்கள் தங்கள் இடது முழங்கையின்மீது சாய்ந்து கொண்டு தங்கள் வலது கைகளினால் உண்பார்கள். மேஜையில் விருந்துண்ணும் ஐக்கியம் பற்றி S. ஸ்காட் பேர்ட்ச்சீ அவர்கள், "உணவு வேளைகள் என்பவை தனிநபர்களுக்கு, சத்தான உணவை உண்ணும் நிகழ்வுகளைக் காட்டிலும் அதிகமானவையாக இருந்தன. இன்னொரு நபருடன் உணவு உண்ணும் நோக்கத்திற்காக உணவு மேஜையண்டையில் வரவேற்கப்படுதல் என்பது நட்புணர்வு, நெருங்கிய நட்பு மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின், சடங்காச்சாரமான ஐஸ்வரிய அடையாளமாகி இருந்தது" என்று எழுதினார்.[12] இப்படிப்பட்ட நிகழ்வுகள் மாபெரும் மகிழ்ச்சி என்ற பண்பைக் கொண்டிருந்தன. இது ஏசாயா 25:6-9ல் உள்ள மேசியாத்துவத் தீர்க்கதரிசனத்தில் இருந்து கடன்பெறப் பட்ட உருவகமாக உள்ளது, அவ்வுருவகத்தில் எல்லா மக்களினங்களுக்கும் தேவன் ஒரு மாபெரும் விருந்தை ஆயத்தப்படுத்தினார்.

பரலோகராஜ்யத்தில் **ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள் என்ற கருத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்?** இரண்டு சாத்தியக்கூறுகள் குறிப்பிடப்பட முடியும். முதலாவது, இது தேவனுடைய இராஜ்யமாகிய சபையில் புறஜாதியார் உள்ளடக்கப்படுதல் என்பதற்கான குறிப்பாக இருக்க முடியும். நூற்றுக்கு அதிபதியின் செயலில், யூதர்களையும் புறஜாதியாரையும் ஒன்றுபோல் சென்றுசேர இருந்த இரட்சிப்பிற்கான தேவனுடைய மாபெரும் திட்டத்தை (காண்க நடபடிகள் 10) இயேசு ஒருவேளை கண்டிருக்கலாம். இது இவ்வாறு இருக்கிறது என்றால், "பரலோகராஜ்யத்தில்" என்ற சொற்றொடர் இயேசு நிலைநாட்ட வந்த

சபையைப் பற்றிய இன்னொரு குறிப்புரையாக உள்ளது எனலாம்.[13]

இந்த விருந்து என்பது, பிதாவின் நித்திய இராஜ்யத்தில் முற்பிதாக்களுடன் புறஜாதியார் ஒன்றுகூடி இருத்தலைக் குறிக்கிறது என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது.[14] இந்த இரண்டாவது கண்ணோட்டமானது, 12ம் வசனத்தில் "இராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்" என்ற தீர்ப்பில் இருந்து வரும் குறிப்பினால் ஆதரிக்கப்படுகிறது.

இவ்விரு கண்ணோட்டங்களும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன, ஏனெனில் இவை இரண்டுமே நித்திய வாழ்வை நோக்கிக் கடந்து செல்கின்றன. கிறிஸ்து திரும்பவும் வரும்போது, அவர் நிலைநாட்டியுள்ள இராஜ்யம் (சபை) பிதாவின் நித்திய இராஜ்யமாகும் (1 கொரிந்தியர் 15:24; 2 பேதுரு 1:11; வெளிப்படுத்தின விசேஷம் 11:15). முதல் கண்ணோட்டமானது, இந்த உலகத்தில் தேவனுடைய இராஜ்யத்தில் ஒருவர் பிரவேசிக்கையில் அதன் அங்கமாகுதல் என்பது இனிவரும் உலகத்தில் மாபெரும் ஐக்கியமாக பெருக்கம் அடையும் என்பதை வலியுறுத்துகிறது. இரண்டாவது கண்ணோட்டமானது, இனிவரும் உலகத்தில் யூதர்களும் புறஜாதியார்களும் ஒரே மாதிரியான ஆசீர்வாதம் பெற்று இருப்பார்கள் என்பதன் மீது கவனம் குவிக்கிறது.

**வசனம் 12.** புறஜாதியார் பரலோக இராஜ்யத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கையில், உத்தரவாதம் பெற்ற குடிமகன்கள் என்று தங்களை நினைத்திருந்த பலர், அதில் இருந்து வெளியே தூக்கி எறியப்படுவார்கள். **ராஜ்யத்தின் புத்திரர்கள் என்னப்பட்டவர்கள்,** இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ள மறுத்த யூதர்களாக இருந்தனர். அவர்கள், முதன்முதலாகத் தேவன் வாக்குத்தத்தத்தைக் கொடுத்த ஆபிரகாமுக்குச் சந்ததியாராக இருந்தனர் (ஆதியாகமம் 12:1-3), ஆனால் அவர்கள் ஆபிரகாமின் விசுவாசத்தைப் போலச் செய்யவில்லை (காண்க 3:8, 9ன் மீதான விளக்கங்கள்). பிற்பாடு யூதர்களில் சிலரைப் பற்றி இயேசு, "... தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று கூறினார் (21:43).

அவிசுவாசமான யூதர்கள் **புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று இயேசு கூறினார்.** இந்த விவரிப்பு, புதிய ஏற்பாட்டில் உள்ள நரகம் பற்றிய மற்ற குறிப்புரைகளைப் போன்றதாக உள்ளது (லூக்கா 13:28; 2 பேது 2:17; யூதா 13). ஜேக் P. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> *புறம்பான இருள்* என்பது மத்தேயு சுவிசேஷத்திற்கு மாத்திரமே உரிய வகையிலான, துன்மார்க்கருக்கு ஏற்படும் உபத்திரவம் குறித்து விவரிக்கும் சொற்றொடராகும் (22:13; 25:30). ஆனால் இந்தக் கருத்து Pseudepigrapha வில் முன்னெதிர் நோக்கப்பட்டுள்ளது ... அழுகையும் பற்கடிப்பும் என்பது மத்தேயு சுவிசேஷத்தில் ஆறு முறைகள் காணப்படுகிறது (8:12; 13:42, 50; 22:13; 24:51; 25:30; இ.வ. லூக்கா 13:28), இது நீதிமான்களின் வளமைக்கு துன்மார்க்கரின் மறுசெயலை விவரிக்க, முன்னதாக சங்கீதம் 112:10ல் காணக்கிடக்கிறது.[15]

ஆபிரகாமின் மாம்சப்பிரகாரமான சந்ததியாக இருத்தல் என்பது,

இராஜ்யத்தில் ஒரு இடத்தை உத்தரவாதப்படுத்தவில்லை, அல்லது அது அவரது ஆத்துமா இழப்பைத் தவிர்ப்பது இல்லை. இருப்பினும் ஒருவர், இயேவை மேசியா என்று உய்த்துணரத் தம்மை ஆயத்தம் செய்யும் எல்லா சிலாக்கியங்களையும் கொண்டிருந்தும், அந்தப் பொன்னான வாய்ப்பு தம்மைவிட்டுக் கடந்து போகும்படி அனுமதிக்கக்கூடும், அதே வேளையில் அனுகூலம் எதுவும் பெற்றிராத ஒரு நபர் எழுந்து இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கக் கூடும்.

**வசனம் 13.** இயேசு தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில் பேசிய பின்பு, நூற்றுக்கு அதிபதியின் செய்தியாளரிடம் திரும்பி, பின்வரும் செய்தியை எடுத்துச் செல்லும்படி கூறினார்: **நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது.** குணமாக்கிய ஒவ்வொரு நிகழ்வும், குணமாக்கப்பட்டவரோ அல்லது குணமாக்கும்படி உதவியைக் கேட்டவரோ, இயேசுவில் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும் என்று வேண்டிக்கேட்கவில்லை. இருப்பினும், நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனைத் தூரத்தில் இருந்தே குணமாக்க, இயேசு கொண்டிருந்த வல்லமையின்மீது அவர் (நூற்றுக்கு அதிபதி) விசுவாசத்தை வெளிப்படுத்தியதால் அவரது விசுவாசம் கனப்படுத்தப்பட்டது: **அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.** கிரேக்க வசனப்பகுதி "அந்த மணியிலேயே" அவன் குணமாக்கப்பட்டான் என்று நேரடியாகக் கூறுகிறது (காண்க யோவான் 4:53). லூக்கா "அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பிவந்தபோது, வியாதியாய்க்கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள்" என்று கூடுதலாகக் கூறினார் (லூக்கா 7:10).

## பேதுருவின் மாமி குணமாக்கப்படுதல் (8:14, 15)

**14இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார்.**

**15அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.**

**வசனம் 14.** இந்த குணமாக்கும் நிகழ்ச்சி **பேதுருவின் வீட்டிலே** நடந்தது. கலிலேயாக் கடலின்மீது மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவரான சீமோன் பேதுரு, சீஷராகும்படி **இயேசுவினால்** அழைக்கப்பட்டிருந்தார் மற்றும் பிற்பாடு அவர் ஒரு அப்போஸ்தலராக நியமிக்கப்பட்டார் (4:18-20; 10:1, 2 ஆகியவற்றின் மீதான விளக்கவுரைகளைக் காணவும்). அவரும் அவரது சகோதரர் அந்திரேயாவும் பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர்கள் (யோவான் 1:44), ஆனால் கப்பர்நகூம் ஊரில் வாழ வந்திருந்தனர். மாற்கு சுவிசேஷத்தில் இவர்களின் வசிப்பிடம் "சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீட்டில்" என்று விவரிக்கப்பட்டுள்ளது (மாற்கு 1:29). பல தலைமுறைகள், அதாவது மிகநீண்ட குடும்பம், அடிக்கடி ஒரே வீட்டில் வசித்தது. அந்திரேயா (மற்றும் அவரது மனைவி?) ஆகியோர், பேதுரு மற்றும் அவரது மனைவி ஆகியோருடன் அந்த வீட்டில் பகிர்ந்து வாழ்ந்தனர் என்பது உறுதி (காண்க 1 கொரிந்தியர் 9:5). பெரும்பாலும் அவர்களுடன் பேதுருவின் **மாமியும்**

*வாழ்ந்திருக்கச் சாத்தியக்கூறு இருந்தது. அத்துடன் கூடுதலாக, இயேசு நாசரேத்தூரை விட்டுப் புறப்பட்டு வந்த பின்னர், தமது செயல்பாடுகளின் மைய இடமாகப் பேதுருவின் இல்லத்தையே ஏற்படுத்திக் கொண்டார் என்பதாகத் தோன்றுகிறது (4:13; மாற்கு 1:35; 2:1).*

*இயேசு வீட்டிற்கு வந்தபோது, பேதுருவின் மாமி* ***காய்ச்சலாகப் படுக்கையில் படுத்துக் கிடந்தார்.*** *மாற்கு மற்றும் லூக்கா ஆகிய இருவருமே, இந்தப் பெண்ணின் சுகவீனம் பற்றிப் பெயர் அறியப்படாத நபர்கள் ("அவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்) இயேசுவினிடம் தகவல் தெரிவித்ததாகச் சுட்டிக்காண்பிக்கின்றனர். இருப்பினும், "அவர்கள்" என்பது, பேதுரு அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரைக் குறிப்பிடலாம் (மாற்கு 1:29, 30). அந்தப் பெண் "மிகுந்த" காய்ச்சலால் (கடும் ஜுரத்தினால்) அவதிப்பட்டுக் கொண்டிருந்தார் (லூக்கா 4:38). அவரது சுகவீனத்தின் இயல்பு வசனப்பகுதியில் தரப்படவில்லை, இருந்தபோதிலும் அந்த வயதில் ஒரு காய்ச்சல் என்பது வெறும் அறிகுறியாக மாத்திரமல்ல ஆனால் வியாதியாகவே காணப்பட்டிருக்கலாம் (காண்க யோவான் 4:52; நடபடிகள் 28:8). அப்பெண்மணி எழுந்திருக்க இயலாது இருந்தார், மற்றும் புதிதாய் வந்தவர்களுக்குப் பணிவிடை செய்ய இயலாது இருந்தார் என்பது, அது மிகவும் தீவிரமான சுகவீனம் என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம்.*

***வசனம் 15.*** *காய்ச்சலாகக் கிடந்த பெண்ணின் கையை இயேசு* ***தொட்டார்****- இது யூதப் பாரம்பரியத்தில் தடைசெய்யப்பட்ட ஒரு செயலாகும்[16] மற்றும் உடனே* ***காய்ச்சல்*** *குறைந்தது. பின்பு அவள்* ***எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.*** *அந்தப் பெண்மணி மற்றவர்களுக்குப் பணிவிடை செய்திருப்பார் என்றாலும், அவரை இயேசு குணமாக்கிய பின்பு அவர்மீது அப்பெண்மணி விசேஷ கவனத்தைச் செலுத்தி இருப்பார் என்பது நிச்சயம்.*

## *இயேசு குணமாக்கியதன் தொகுப்புரை (8:16, 17)*

***16 அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.***

***17 அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.***

***வசனம் 16.*** *இயேசு கப்பர்நகூமுக்குச் சென்றபோது, "உடனே" அவர் ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, போதகம் பண்ணினார் (மாற்கு 1:21; காண்க லூக்கா 4:31, 33). அங்கு அவர், அசுத்த ஆவிகளால் பிடிக்கப்பட்ட ஒரு மனிதனைச் சந்தித்தார். பிரதிப்பெயர்ச் சொற்களினால் பன்மைத்தன்மை சுட்டிக்காண்பிக்கப்படுகிறது. இயேசு, "நீ பேசாமல் இவனை விட்டுப் பறப்பட்டுப்போ" என்று கூறி அசுத்த ஆவிகளைக் கடிந்து கொண்டார் (மாற்கு 1:25). இந்த குணமாக்குதல், "அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமா"க்க் காரணமாயிற்று (மாற்கு 1:28; காண்க லூக்கா 4:37).*

*யூதர்களில் பலர் தங்களிடத்தில் வியாதிப்பட்டுக் கிடந்தவர்களை, ஒய்வுநாள் முடிவதற்கு முன்னர் இயேசுவினிடம் கொண்டுவரப் பயந்தனர். வியாதிப்பட்டுக் கிடந்த சிலரைத் தூக்கி வர வேண்டி இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை, மற்றும் யூதத் தலைவர்களில் சிலர், அவ்வாறு அவர்கள் ஒய்வுநாளன்று குணமாக்கும்படி, தங்கள் அன்புக்குரியவர்களைத் தூக்கி வருதல் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமானது என்று அறிவித்திருக்கச் சாத்தியக்கூறு இருந்தது (காண்க யோவான் 5:10).*[17] *ஆகையால், மக்கள் இயேசுவினிடம் வருவதற்கு, அந்திப்பொழுது வரும்வரை காத்திருந்தனர் (மாற்கு 1:32; லூக்கா 4:40). யூதர்கள் சூரியன் மறைவில் இருந்து அடுத்து சூரியன் மறைவு வரை ஒரு நாளாகக் கருதினர் (ஆதியாகமம் 1:5, 8, 13, 19, 23, 31).* ***அஸ்தமனமானபோது,*** *ஒய்வுநாள் முடிந்தது, மற்றும் வாரத்தின் முதல் நாள் தொடங்கியிருந்தது.*

*இயேசு முன்பு பலமுறை செய்திருந்தது - மற்றும் பிற்பாடு மீண்டும் செய்யவிருந்தது - போன்றே, வியாதிப்பட்ட மக்களின் விசுவாசத்தின் அளவையோ அல்லது அவர்களின் குறிப்பிட்ட சுகவீனத்தையோ பொருட்படுத்தாமல், எல்லாரையும்* ***குணமாக்கினார்.*** *இருப்பினும், அசுத்த* ***ஆவிகள் பிடித்தவர்களுக்கும் சுகவீனமாய் இருந்தவர்களுக்கும்*** *இடையில் ஒரு தெளிவான வித்தியாசம் மத்தேயு சுவிசேஷத்தில் வரையப்பட்டுள்ளது (காண்க 4:23, 24).* ***இயேசு அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தினார்*** *என்பதில் அவரது வல்லமை தெளிவாக உள்ளது. இதற்கு நேர்மாறாக, பழங்காலத்து மந்திரவாதிகள், மந்திர உச்சாடனத்தினால், உயர்ந்த ஆவிகளை எழுப்புவதினால் மற்றும் மீனின் உள்ளுறுப்புக்களை அல்லது நாற்றம் மிகுந்த வேர்களை எரிப்பதால் அசுத்தமான நாற்றம் எழுப்புவதினால் அசுத்த ஆவிகளைத் துரத்த முயற்சி செய்தனர்.*[18] *கிரஹாம் ட்வெல்ஃப்ட்ரீ அவர்களின் கூற்றுப்படி, பல்வேறு மற்ற பொருள்களும் பயன்படுத்தப்பட்டன:*

> *பாபிலோனிய தல்மூத் அமுலெட்டுகளில், பனமரத்தின் கூர் இலைகள், மரத்தின் சிறு உடைதுண்டுகள், சாம்பல், நிலக்கீல், நாயின் முடி மற்றும் நூல் ஆகியவை பயன்படுத்தப் பட்டுள்ளன; லூசியன் அவர்கள் இரும்பு வளையங்களின் பயன்பாடு பற்றியும், மேஜிக்கல் பாப்பிரி என்பவர் அமுலேட்கள், ஒலிவக்கிளைகள், மார்ஜோராம் மற்றும் விசேஷ ஒலிகள் ஆகியவற்றை மந்திரவாதிகள் பயன்படுத்துதல் பற்றியும் கூறுகின்றனர்.*[19]

***வசனம் 17.*** *இயேசுவின் குணமாக்கும் ஊழியத்தை,* ***ஏசாயாவினுடைய பின்வரும் வார்த்தைகளின் நிறைவேற்றமாக மத்தேயு கண்ணோக்கினார்: அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்.*** *ஒருபொருள் இணைவாக்கியம் என்ற வகையிலான அவரது மேற்கோள், ஏசாயா 53:4ல் இருந்து எடுக்கப்பட்டுள்ளது, இதை* NASB *வேதாகமம் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: “மெய்யாகவே அவர் தாமே நமது துயரங்களைச் சுமந்தார், நமது துக்கங்களை அவர் தூக்கிச்சென்றார்.” ஆல்பெர்ட் பேர்னெஸ் அவர்கள், “ஏசாயாவின் புத்தகத்தில்* பாடுகள் *என்றும் மத்தேயு சுவிசேஷத்தில்* பெலவீனங்கள் *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லானது, எபிரெயம் மற்றும் கிரேக்க மொழிகளில்* உடலின் வியாதிகளில் ஒன்று *என்று தக்க வகையில் அர்த்தப்படுகிறது ... . அந்தத் துக்கங்களைச் சுமத்தல் என்பது அவற்றை அப்புறப்படுத்துதல் அல்லது அவற்றை நீக்குதலுக்கானது*

என்பது தெளிவு" என்று விவாதித்தார்.[20] லூயிஸ் அவர்கள், "இயேசு தமது குணமாக்குதல்களில், ஏசாயா விவரித்தபடி, 'கர்த்தருடைய ஊழியக்காரர்' என்ற தமது பணிப்பொறுப்பில் ஒரு பகுதியை நிறைவேற்றினார்" என்று எழுதினார்.[21]

ஏசாயா புத்தகத்தில் இருந்து வருகிற மேற்கோள் அனேகமாக, சிலுவையின்மீது இயேசுவின் நிறைவான வெற்றியைச் சுட்டிக்காண்பிக்கலாம். மேசியாவின் பரிகாரப்பலி பற்றிய முன்னுரைத்தல் என்பதே ஏசாயா 53ன் சந்தர்ப்பப்பொருளாக உள்ளது. D. A. கேர்ஸன் அவர்கள், "இயேசுவின் குணமாக்கும் அற்புதங்கள், வல்லமையின் செயல்களாக மாத்திரமல்ல ஆனால் இனி நடைபெற இருந்த இயேசுவின் பரிகாரப்பலியான மரணத்தின் நிகழ்வாக நிகழ்த்தப்பட்டன என்பதை மத்தேயு புரிந்து கொண்டுள்ளார்" என்று எழுதினார்.[22] மோரீஸ் அவர்கள், "வியாதிப்பட்ட தன்மைக்கு கடைசிப் பதிலானது சிலுவையில்தான் உள்ளது என்ற சிந்தனை இங்கு இருக்கிறது என்பது நிச்சயம்" என்று குறிப்பிட்டார்.[23] ஜான் பிலிப்ஸ் அவர்கள், பின்வரும் முக்கியமான உற்றுநோக்கலை ஏற்படுத்தினார்:

> வியாதிப்பட்டவர்கள் குறித்து, சிலுவையின்மீது கிறிஸ்துவின் செயல்பாடு பற்றி நாம் பேசும்போது, நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அது, பரிகாரபலியில் *நமக்கு* உடனடியான உடல்ரீதியான குணமாக்குதல் பெற்றுத்தரப்பட்டது என்று அர்த்தப்படுவதில்லை. அதைப் போதிக்கும் மக்கள் தவறானவர்களாக உள்ளனர். அவர்கள், இன்றைய நாட்களில் குணமாக்குதல் எப்போதும் கிடைக்கிறது என்றும் குணமாக்கப் படாதவர்கள் அதைப் பெறுவதற்கான விசுவாசத்தில் குறைவுபட்டுள்ளனர் என்றும் கூறும்போது, பெரிதும் மனரீதியான துன்பத்தைச் சுமத்துதல் என்பதற்குப் பொறுப்பாளிகளாகவும் உள்ளனர். மரணத்தில் இருந்து கிடைக்கும் பாதிப்பற்ற தன்மையோ அல்லது உடல்ரீதியான குணமாக்குதலோ, உத்தரவாதமான நமது உரிமையாக இருப்பதில்லை. வியாதியில் இருந்து நிறைவான விடுதலையும் மரணத்தின்மீது வெற்றியும் [வெளிப்படுத்தின விசேஷம் 21:4] சிலுவையின் மூலம் நமதாகும் - ஆனால் அது "நமது சரீர மீட்பு" என்று பவுல் அழைக்கும் விஷயத்திகாகக் காத்திருக்கிறது (ரோமர் 8:22-23).[24]

இந்த உலகத்தில் மக்களின் *ஆவிக்குரிய* தேவைகளைச் சந்தித்தல் என்பதே கிறிஸ்துவின் ஊழியமாக இருந்தது; ஆனால் அவரது அற்புதங்கள், விசேஷமாக குணமாக்குதல்கள், பாவத்தில் இருந்து நாம் குணமாக்கப்பட வேண்டியதன் தேவையினுடைய ஆழத்தை விவரிக்கின்றன மற்றும் அவை நம்மை முழுமையாக்க அவர் கொண்டுள்ள வல்லமையைச் செயல்விளக்கப்படுத்துகின்றன. "அவைகள் தேவனுடைய இருதயத்தைப் பற்றிய ஆச்சரியமான வெளிப்படுத்துதலை நமக்குத் தருகின்றன"[25] மற்றும் அவர் தமது மக்கள்மீது கொண்டுள்ள இணையற்ற அன்பை நமக்கு நினைவூட்டுகின்றன.

## அற்புதங்கள் (அதிகாரம் 8)

"அற்புதம்" என்பது "இயற்கை விதிகளால் விளக்கி உரைக்கப்பட இயலாத ஒரு நிகழ்வாக, எனவே இயற்கைக்கு மேலான அல்லது தேவனுடைய செயல்பாட்டில் தனது தோற்றத்தைக் கொண்டதாகக் கருதப்படுகிறது."[26] லூயிஸ் அவர்கள், "அற்புதம்" என்பதை "இயற்கைக்கு மேலான வல்லமை இயற்கையில் குறுக்கிடுதல்" என்று அடையாளப்படுத்தினார்.[27] *வேதாகமத்திற்கான வெஸ்ட்மின்ஸ்ட்டர் அகராதியில்* இன்னும் அதிகம் முழுமையான விளக்கம் காணப்படுகிறது:

> மிகக்குறுகிய வேதாகம ரீதியான கருத்தில், அற்புதங்கள் என்பவை, தேவனுடைய உடனடியான வல்லமையினால் புறம்பான உலகத்தில் தரவழைக்கப்பட்ட நிகழ்வுகளாக உள்ளன. தேவன் எல்லாவற்றையும் நிலைநிறுத்தி, கட்டுப்படுத்தி, வழிநடத்துகிறார் மற்றும் அவர் தனிப்பட்டவராகவும் சர்வவல்லமைராகவும் இருக்கிறார் என்பதால் இவைகள் சாத்தியமாகின்றன.[28]

வேதாகம விபரங்களில் அவ்வப்போது, தேவன் தமது தெய்வீக வல்லமையினால், இயற்கையின் விதிகளைப் புறம்பே ஒதுக்கி, அவற்றிற்கு வெளியே செயல்களை நிகழ்த்தினார். வேதாகம அற்புதங்கள் முடிந்து போயிருப்பதால் (காண்க 1 கொரிந்தியர் 13:8-10), இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட அற்புதங்களே நிகழ்த்துவதாக உரிமைகோருபவர்கள் தங்களையே வஞ்சித்துக் கொள்பவர்களாக உள்ளனர்.

அற்புதங்கள் அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் தாங்கள் முன்வைத்த செய்தியை உறுதிப்படுத்துதல் என்ற நோக்கத்திற்காக முதல் நூற்றாண்டில் தரப்பட்டன (மாற்கு 16:17-20; எபிரெயர் 2:2-4). இன்றைய நாட்களில் சிலர் வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக உள்ளது என்பதை மக்கள் நம்புவதற்கு, அற்புதங்கள் இன்னமும் தேவைப்படுகின்றன என்று வலியுறுத்துகின்றனர். இரட்சிப்புக்கு ஏதுவான விசுவாசத்தை உண்டாக்க, வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்புதங்கள் போதுமானவையாக இருப்பதாக யோவான் எழுதினார் (யோவான் 20:30, 31). அற்புதங்களைக் காண்பதினால் அல்ல, ஆனால் தேவனுடைய வசனத்தை கேள்விப்படுவதன் மூலமாகவே விசுவாசம் உண்டாக்கப்படுகிறது (ரோமர் 10:17). கிறிஸ்துவின் அற்புதங்களைக் கண்டவர்களில் பலர் விசுவாசிக்கவில்லை (12:22-24). தேவன் இன்றைய நாட்களில் இன்னமும் செயல்படுகிறார், ஆனால் அவர் தாம் உருவாக்கிய இயற்கையின் முறைமை மூலமாக தெய்வீக அருளிரக்கத்தை அளிப்பதன் மூலம் அதைச் செய்கிறார்.

## தொழுநோய் (8:1-4)

வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், தொழுநோய் என்ற தலைப்பின்கீழ் பல நோய்கள் இருந்தன. தொழுநோய் என்பதாகக் காணப்பட்ட பல நோய்கள் உண்மையில் நோயாக இருக்கவில்லை. இந்நோயினால் பாதிக்கப்பட்ட

ஒருவரிடத்தில், ஆசாரியரால் நோய்க்குறி கண்டறியப்பட்டது எவ்வாறு என்பது லேவியராகமம் 14:1-32ல் வரைகுறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் இந்த வியாதிக்கு சுகமாக்கும் வழி எதுவும் இல்லாததால், ஒரு நபர் இந்த வியாதியில் இருந்து சுத்தமாக்கப்பட்டால் அது தேவனுடைய கிருபையாலேதான் நடந்தது (2 இராஜாக்கள் 5:1-19; லூக்கா 4:27). சுத்தமாக்கப்படுதல் நடந்தது என்றால், குணமாக்கப்பட்ட நபர் சமுதாயத்தில் மீளக்கட்டப்படுவதற்கு திட்டவட்டமான செயல்முறை ஒன்று இருந்தது. குணமாக்குதல்கள் அரிதாயிருந்தன (எண்ணாகமம் 12:13-15; 2 இராஜாக்கள் 5:9-14). சில வேளைகளில், தொழுநோய் என்பது தேவனுடைய செயல்பாட்டின் நேரடி விளைவாக வந்தது (எண்ணாகமம் 12:9-15).

நியாயப்பிரமாணத்தின்கீழ், தொழுநோயாளிகள் கிருபையின் கீழ் இருக்க வேண்டியவகையிலான பாவிபோல இருந்தனர். தொழுநோய் ஒருவரை சமூகத்தில் இருந்து பிரித்து வைப்பது போன்றே, பாவம் என்பது ஒருவரை, தேவனிடமிருந்தும் தேவனுடைய மக்களிடம் இருந்தும் பிரிக்கிறது (ஏசாயா 59:1, 2). பாவத்தின் காரணமாக ஏற்பட்ட பிரிவினையானது தற்காலிகமானதாகவோ அல்லது நிரந்தரமானதாகவோ இருக்க முடியும் (2 தெசலோனிக்கேயர் 1:6-9). இந்தப் பிரிவினையின் அர்த்தம் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்ளாது இருக்கலாம், ஆனால் நியாயத்தீர்ப்பிற்குப் பின்பு அவர்கள் அறிந்து கொள்வார்கள் (25:41, 46). பாவம் என்ற வியாதிக்கு குணமாக்கும் சிகிச்சை ஒன்று உள்ளது. ஆத்துமாவிற்கு கிறிஸ்துவின் இரத்தம் பயன்படுத்தப்படுகிறது (எபேசியர் 1:7; கொலோசெயர் 1:20; வெளிப்படுத்தின விசேஷம் 1:5).

## திகைப்பூட்டும் விசுவாசம் (8:5-13)

இந்த வரலாற்றில் கண்ணியமான பல பண்புகள் ரோம நூற்றுக்கு அதிபதியால் செயல்விளக்கப் படுத்தப்பட்டன. (1) அதிகாரம் மற்றும் செல்வாக்கு கொண்ட மனிதர் என்ற வகையில் அவர், கப்பர்நகூம் ஊரில் மக்கள் பலரின் மதிப்பைப் பெற்றிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. (2) அவர் செல்வாக்குள்ள மனிதராக இருந்தபோதிலும் தாழ்மையுள்ள மனிதராகவும் இருந்தார். இயேசுவினிடம் அவர், “ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல” என்று கூறினார் (8:8). (3) நூற்றுக்கு அதிபதி யூத மக்களினத்தை நேசித்தவராக இருந்தார் (லூக்கா 7:5). அவர் புறதெய்வ வணக்க சூழ்நிலையில் வளர்க்கப்பட்டிருக்கலாம் என்றாலும், அவர் “தேவனுக்குப் பயந்தவர்” ஆனார் என்பது உறுதி. (4) அவர் ஒரு தாராள குணமுடைய மனிதராகவும் இருந்தார். கப்பர்நகூமில் இருந்த யூத மூப்பர்கள் தங்கள் உள்ளூர் ஜெப ஆலயத்திற்கு இந்த நூற்றுக்கு அதிபதி கட்டிடம் கட்ட உதவினார் என்பதால் அவரைப் பாராட்டினர் (லூக்கா 7:5). அவர் திட்டத்திற்கு நிதி உதவி அளித்தார் என்பது மாத்திரமாவது குறைந்த பட்சமாக இதன் அர்த்தமாக இருக்கலாம். (5) இந்தக் கண்ணியமான பண்புகள் எல்லாவற்றிற்கும் அப்பால், அவர் மாபெரும் விசுவாசம் கொண்ட மனிதராக இருந்தார். அவர் தமது வேலைக்காரன் தூரத்தில் இருக்கும்போதே குணமாகும்படி “ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லுமாறு” இயேசுவினிடத்தில் கேட்டுக்கொண்டார் (8:8). இயேசு இந்த நூற்றுக்கு அதிபதியைப்

*பார்த்து "ஆச்சரியப்பட்டு" "இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை" என்று கூறினார் (8:10). இன்றைய நாட்களில் நமது விசுவாசத்தைப் பார்த்து இயேசு என்ன கூறுவார்?*

டேவிட் ஸ்டீவர்ட்

## *பணிவிடை செய்ய மீட்கப்பட்டவர் (8:14, 15)*

*பேதுருவின் மாமி குணமாக்கப்பட்ட நிகழ்வானது, இயேசுவுக்கும் வீட்டில் வந்து கூடி இருந்தவர்களுக்கும் அந்தப் பெண்மணி உடனடியாகப் பணிவிடை செய்தலை விளைவித்தது (காண்க லூக்கா 4:39). எஜமானரின் தொடுதல் அந்தப் பெண்மணியின் வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்திற்று. கிறிஸ்துவினால் நமக்குக் கிடைக்கும் ஆவிக்குரிய குணமாக்குதல் என்பது, இதே போன்ற நல்ல செயல்களை விளைவிக்க வேண்டும்; நாம் ஊழியம் செய்யவே மீட்கப்பட்டிருக்கிறோம். பவுல்,தேவனுடைய கிருபையினால் நாம் மீட்கப்பட்டோம் என்று வலியுறுத்தியபின்பு, "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்" என்று முடித்தார் (எபேசியர் 2:10).*

டேவிட் ஸ்டீவர்ட்

## *வியாதியின் வேர் (8:16, 17)*

*"கர்த்தருடைய ஊழியக்காரர்" என்ற வகையில் (ஏசாயா 53:4) மக்களைக் குணமாக்குதல் என்பது இயேசுவின் ஊழியத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கையில், அவர் உலகத்திற்கு ஏன் வந்தார் என்பதற்கு, அது நிறைவான முடிவாக இருக்கவில்லை. ஹேக்னெர் அவர்கள், "வெற்றிகொள்ளப்பட வேண்டிய உண்மையான எதிரி வியாதியல்ல: பாவமே எதிரியாக உள்ளது, ஏனெனில் பாவத்தினால் உண்டாக்கப்பட்ட விழுந்துபோன உலகம், இந்தக் காலத்தின் துன்பம் மற்றும் வியாதி ஆகியவற்றிற்குப் பின்னால் முடிவாக விழுந்து கிடக்கிறது" என்று விளக்கப்படுத்தினார்.[29] சிலுவையின்மீது இயேசு மரித்தபோது, பாவமன்னிப்பிற்காக அவர் தமது இரத்தத்தை ஊற்றினார் (26:28). நம்மில், இந்த மீட்பின் இரத்தத்தை ஞானஸ்நானத்தில் சந்தித்துள்ளவர்களும் (நடபடிகள் 2:38; ரோமர் 6:3, 4; வெளிப்படுத்தின விசேஷம் 7:14) தொடர்ந்து அந்த இரத்தத்தினால் சுத்திகரிக்கப் படுபவர்களும் (1 யோவான் 1:9), நிறைவாக அழியாத உடல் ஒன்றைப் பெற்றுக்கொள்வோம் (1 கொரிந்தியர் 15:50-57; 1 யோவான் 3:2). நாம் பரலோகத்தில் தேவனுடன் என்றென்றைக்கும் வாழ்வோம், அங்கு மரணமோ, புலம்புதலோ, அழுகையோ அல்லது வேதனையோ இராது (வெளிப்படுத்தின விசேஷம் 21:4).*

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]*Leviticus Rabbah* 16.6, 7; 17.3; *Numbers Rabbah* 7.5; 16.6; *Deuteronomy Rabbah* 6.8. [2]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 73. [3]*காண்க* James F. Strange and Hershel Shanks, "Has the

House Where Jesus Stayed in Capernaum Been Found?" and "Synagogue Where Jesus Preached Found at Capernaum," in *Archeology and the Bible: The Best of BAR,* vol. 2, *Archeology in the World of Herod, Jesus and Paul*, ed. Hershel Shanks and Dan P. Cole (Washington, D.C.: Biblical Archeology Society, 1990), 188-99, 200-7. [4]Tacitus *Annals* 4.5. *காண்க* Everett Ferguson, *Backgrounds of Early Christianity,* 2d ed. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1993), 46-48. [5]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 158. [6]Leon Morris, *Luke: An Introduction and Commentary,* rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 151. [7]*யோவான் சுவிசேஷத்தில் இதேபோன்ற "இராணுவ அதிகாரி" பற்றிய வரலாறு இன்னொன்று கப்பர்நகூமில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது (யோவான் 4:46-54). இருப்பினும் அங்கு "அடிமை" என்ற வார்த்தையலல் ஆனால் "மகன்" என்ற* (*huios*) *வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது.* [8]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 90. [9]Mounce, 74. [10]Mishnah *Oholoth* 18.7.

[11]Hare, 91. [12]S. Scott Bartchy, "Table Fellowship," in *Dictionary of Jesus and the Gospels*, ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 796. [13]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 191. [14]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 195. [15]Jack P. Lewis, *The Gospel according to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 123. [16]Donald A. Hagner, *Matthew 1-13,* Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 209. [17]*ஓய்வுநாளில் வேலை செய்தலுக்கு எதிராக முப்பத்து ஒன்பது தடைகளை ரபீக்கள் ஏற்படுத்தினர். இவற்றில் கடைசியான தடையானது, "ஒரு பொருளை ஒரு எல்லைப் பகுதியில் இருந்து இன்னொரு எல்லைப்பகுதிக்கு எடுத்துச் செல்லுதல்" என்பதாகும்* (Mishnah *Shabbath* 7.2). *இருப்பினும், உயிருள்ள ஒரு மனிதரை படுக்கையுடன் தூக்கிச் செல்பவர் இதில் விதிவிலக்குப் பெறுவதாக ஒரு ரபீ கூறினார்.* (Mishnah *Shabbath* 10.5.) *இருந்தபோதிலும் மற்றவர்கள் இதற்கு எதிரான கண்ணோட்டத்தை மேற்கொண்டிருக்க சாத்தியக்கூறு உள்ளது.* [18]*Testament of Solomon* 2.4; 5.5, 13; 8.5-11; Tobit 6:7, 8, 16-18; 8:2, 3; Josephus *Antiquities* 8.2.5. [19]Graham H. Twelftree, "Demon, Devil, Satan," in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 167. [20]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Philadelphia: N.p., 1832; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1974), 88.*ஒப்பிடுக புலம்பல் 53:4 அல்லது மத்தேயு 8:17 ஆகியவற்றில்* NRSV.

[21]Lewis, 124. [22]D. A. Carson, *When Jesus Confronts the World: An Exposition of Matthew 8-10* (Grand Rapids, Mich.: Baker Book House, 1987), 33. [23]Morris, *Matthew,* 198. [24]John Phillips, *Exploring the Gospel of Matthew: An Expository Commentary,* The John Phillips Commentary Series (Grand Rapids, Mich.: Kregel Publications, 1999), 151. [25]William M. Taylor, *The Miracles of Our Savior* (New York: Doubleday, Doran & Co., 1928), 26. [26]*The American Heritage Dictionary,* 4th ed. (2001), s.v. "miracle." [27]C. S. Lewis, *Miracles: A Preliminary Study* (New York: Macmillan Co., 1947), 10. [28]Henry Snyder Gehman, ed., "Miracle," *The New Westminster Dictionary of the Bible* (Philadelphia: Westminster Press, 1970), 622. [29]Hagner, 211.